திருச்சி மாவட்டம் லால்குடி ஒன்றியத்திற்குட்பட்ட மணக்கால் ஊராட்சியில் நடைபெற்று வரும் ரயில்வே மேம்பாட்டு பணிகளை பெரம்பலூர் நாடாளுமன்ற எம்.பி. அருண் நேரு ஆய்வு செய்தார் அருகில் நகராட்சி ஆணையர் குமார் ,லால்குடி நகர மன்ற தலைவர் துரை மாணிக்கம் ,மற்றும் கழக நிர்வாகிகள் ரவிச்சந்திரன் ,சக்திவேல், வழக்கறிஞர் ரவி உட்பட பலர் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் போக்குவரத்து துறை சார்பில், மினி பேருந்துகள் இயக்கத்தினைத் தொடங்கி வைத்ததை தொடர்ந்து கோயம்புத்தூர் மாவட்டத்தில் இயக்கப்படவுள்ள 30 மினி பேருந்துகளை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி தொடங்கி வைத்தனர். இதில் மாநகர் மாவட்டச் செயலாளர் செயலாளர், முன்னாள் எம்.எல் ஏ. நா.கார்த்திக், மாநகர காவல் ஆணையாளர் சரவணன் சுந்தர், மாநகராட்சி மேயர் க.ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், பகுதி கழக செயலாளர் ஆர்.எம்.சேதுராமன், மண்டல குழு தலைவர்கள் மீனா லோகு, தெய்வயானை தமிழ்மறை மாவட்ட உறுப்பினர் பிரபா ராஜ்குமார், வட்டக் கழக செயலாளர் கே. ராமநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் – ஓரணியில் தமிழ்நாடு –

இல்லங்கள்தோறும் சென்று கழகத்தில் 60 சதவீதம் உறுப்பினர்களைச் சேர்ப்போம்!

கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், ஜூன்.21-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம்,19.06.2025, திங்கள் கிழமை, பிற்பகல் 12.30 மணியளவில், காணொலி காட்சி மூலமாக, கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர்கள் ஏ.அங்கையர் கன்னி, விஜயன்ராகவன், சுவை.சுரேஷ், எம்.எம்.சிவா,அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி. கதிரவன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், தொகுதி பொறுப்பாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், கடலூர் கிழக்கு மாவட்டத்தில் 20-ம் தேதி முதல் ஓரணியில் தமிழ்நாடு என்ற கழக தலைவர் அவர்களின் அறிவிப்பினை அமல்படுத்தும் விதமாக இல்லங்கள்தோறும் கழக நிர்வாகிகள் சென்று பொதுமக்களை சந்தித்து, கழகத்தில் 60 சதவீதம் புதிய உறுப்பினர்களை சேர்த்திடல் வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதாசம்பத், ஒன்றிய செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் மேற்கு அ. முத்துசாமி, குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், திருமுட்டம் கிழக்கு தங்க.ஆனந்தன், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி, கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கம்மாபுரம் வடக்கு பா.திருமாவளவன், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம்,

குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி தெற்கு ம. சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி, குமராட்சி மேற்கு கே.நடராஜன், பரங்கிப்பேட்டை தெற்கு ஆர். கலையரசன், பரங்கிப் பேட்டை மத்திய எம்.மனோகரன், புவனகிரி கிழக்கு ஏ. எஸ்.மதியழகன், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், திருமுட்டம் மேற்கு கே.ஆர். கோவிந்தராஜ், குமராட்சி மத்திய ஆர்.ராஜேந்திரன், பரங்கிப்பேட்டை தெற்கு இரா.கலையரசன், புவனகிரி மேற்கு ஏ.எம்.மதியழகன், புவனகிரி மத்திய வெற்றிவேலு , கீரப்பாளை யம் மத்திய வி.பி.பாலு, கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன்,

கடலூர் மத்திய கே. மகேஷ், காட்டுமன்னார்கோவில் த.ஜெயபாண்டி யன், கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்க டேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செ ல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்- வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜயராகவன், இரா.தமிழரசன், ச.கல்யாணசுந்தரம், மு.வெற்றிவேல், என்.டி.கணேசன், மஞ்சு, பா.கோதண்டபாணி,

பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப.ஜெய்சங்கர், சேத்தியாதோப்பு ப. மனோகரன், திருமுட்டம் பூ.செல்வகுமார், புவனகிரி த.கந்தன், அண்ணாமலை நகர் க.பழனி, லால்பேட்டை எம்.அன்வர்சதாத், பரங்கிப் பேட்டை மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: மாணவரணி அமைப்பாளர் அப்பு ஆர்.சந்தியநாராயணன்,

பொறியாளர் அணி அப்பு சந்திரசேகரன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மகளிர் அணி த. அமுதராணி, மகளிர் தொண்டரணி, ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, ஆதிதிராவிடர் நல்லக்குழு ஆர்.பரந்தாமன், சிறுபான்மை யினர் நல உரிமை பிரிவு எம்.எஸ்.முகமது யூனூஸ், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன், தொழுச பி.பழனிவேல்,

தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி வாசு, தொழிலாளர் அணி கி.தண்டபாணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவக்கொழுந்து, இலக்கிய அணி பழனிசாமி, டி.வெங்கடாஜ லபதி, கலை இலக்கிய பிரிவு, ஜி.சின்னமணி, தகவல் தொழில்நுட்ப அணி அ.முத்தமிழ்செல்வன், வி.எம்.வெற்றிசெல்வன், ப.பிரவின்குமார் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி தலைமை, மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி, கே.இ.பிரகாஷ் எம்.பி. முன்னிலை

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் - தளபதியார் அரங்கம்!

மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார்!

நாமக்கல், ஜூன் 21 -

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் திறப்பு விழா நாமக்கல் திருச்செங்கோடு சாலையில் மலை சுற்றி ரோடு பகுதியில் நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி வரவேற்புரை ஆற்றினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே. ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கி பேசுகையில், தி.மு.க.வின் நான்காண்டு கால ஆட்சியில் திருச்செங்கோட்டில் சுற்று வட்டச் சாலை, நீண்ட காலமாக இருந்து வந்த பிரச்சனையை தீர்த்து பள்ளிபாளையம் மேம்பாலம், திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயில் சார்பாக ஒரு கல்லூரி, மல்லசமுத்திரத்தில் ஐடிஐ கல்வி நிறுவனம், மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு நிகராக அரசு மருத்துவமனை என பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து திருச்செங்கோடு தொகுதிக்காக மட்டுமல்ல மேற்கு மண்டலத்திற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என தொடர்ந்து சட்டமன்றத்தில் ஈஸ்வரன் எம் எல் ஏ கோரிக்கை வைத்து அதற்காக அனைத்து துறை அதிகாரிகளையும் சந்தித்து செயலாற்றி வருகிறார்.

சேலம் மாவட்டம் இரண்டாகப் பிரித்து நாமக்கல் மாவட்டம் 1996 ல் பிரிக்கப்பட்டதிலிருந்து பல எம் எல் எம் எல் ஏக்கள் வந்திருந்தாலும் தற்போது மேற்கு மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதிகளுக்கும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. முதல்வர் அறிவித்துள்ள ஓரணியில் தமிழ்நாடு என்ற உறுப்பினர் சேர்க்கையை முழுமையாக ஈடுபட வேண்டும். 100% வாக்காளர்களில் 40 சதவீதம் உறுப்பினர்கள் சேர்க்கை செயல்படுத்தி விட்டாலே நாமக்கல் மாவட்டத்தில் 6 தொகுதியையும் எளிதாக வெற்றி பெறலாம் என்றார்.

விழாவில் முன்னாள் அமைச்சரும், மேற்கு மண்டல பொறுப்பாளருமான வி,செந்தில் பாலாஜி கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார். அப்போது அவர் பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் செய்துள்ள திட்டங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்த்தாலே நாம் எளிமையாக வெற்றி பெற முடியும் ஒவ்வொரு நகர செயலாளரும் ஒவ்வொரு பகுதி செயலாளர், ஒன்றிய செயலாளரும் தங்களுக்கான பூத்துகளைக் குறித்து கவனம் செலுத்தினாலே நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதிகளையும் எளிதாக வெற்றி பெற முடியும் குமாரபாளையம் தொகுதியை பொருத்த வரை பத்தாயிரம் வாக்குகள் கூடுதலாக பெற்றாலே நாம் எளிதாக வெற்றி பெற முடியும். வரும் 2026 சட்ட மன்றத் தேர்தலில் மண்டல பொறுப்பாளர் என்கிற முறையில் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் நான் கூடுதல் கவனம் செலுத்த உள்ளேன் கிழக்கு மாவட்டத்தை பொருத்தவரை ஒரு அமைச்சரும், ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் இருக்கிறார்கள். ஆனால் மேற்கு மாவட்டத்தை பொருத்த வரை கூட்டணிக் கட்சியினர் தான் எம்.பி ஆகவும் எம்எல்ஏவாகவும் இருப்பதால் நான் மேற்கு மாவட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என விரும்புகிறேன் அந்தந்த பகுதி நகர செயலாளர்களும் ஒன்றிய செயலாளர்களும் வாக்குச்சாவடி முகவர்களும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை சிறப்பாக நிறைவேற்றினால் எளிதில் வெற்றி பெற்று மூன்று தொகுதிகளையும் நம்மால் கைப்பற்ற முடியும் தமிழக முதல்வர் பல்வேறு திட்டங்களை மக்களுக்கு செய்துள்ளார் அதனை பொதுமக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டியது நமது பொறுப்பு கடந்த நான்கு ஆண்டுகளில் இதுவரை எந்த ஆட்சியில் செய்ய முடியாத திட்டங்களை திருச்செங்கோடு தொகுதிக்கு தமிழக முதல்வர் நிறைவேற்றி தந்துள்ளார் எனவே அனைவரும் ஒருங்கிணைந்து வெற்றி ஒன்றையே இலக்காக கருத்தில் கொண்டு பாடுபட்டால் 2026 தேர்தலில் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் 3 சட்டமன்ற தொகுதிகளையும் நம்மால் கைப்பற்றி தமிழக முதல்வருக்கு வெற்றிக் கனியாக தர முடியும் அனைவரும் இணைந்து செயல்படுவோம் என கூறினார்.

தொடர்ந்து அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் திமுக கொடியேற்றி சிறப்புரையாற்றுகையில், தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்று நான்கு வருடங்களில் அனைத்து தரப்பினருக்கும் பயன் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். கடந்த அதிமுக 10 ஆண்டு கால ஆட்சியை ஒப்பிட்டுப் பார்க்கையில் தி.மு.க. ஆட்சியில் முதல்வர் ஸ்டாலின் சாதனை படைத்து வருகிறார். இதைக் கண்டு எதிர்க்கட்சியினர் பயம் கொண்டுள்ளனர். வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அபார வெற்றி பெற்று அசைக்கும் முடியாத சக்தியாக இருக்கும் என அனைத்து தரப்பினரும் கூறி வருகின்றனர். ஒன்றிய நகர பேரூர் செயலாளர்களுடன் அனைத்து கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் இணைந்து செயல்பட்டால் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் மூன்று தொகுதிகளும் வெற்றி பெற்றே தீரும். மேற்கு மண்டல பொறுப்பாளர் செந்தில் பாலாஜி, கிழக்கு மாவட்ட செயலாளர் ராஜேஸ்குமார், மேற்கு மாவட்ட செயலாளர் கே எஸ் மூர்த்தி ஆகியோர் கொடுக்கும் வியூகங்களை சரியாக செயல்படுத்தினாலே நாமக்கல் மாவட்டத்தில் ஆறு தொகுதிகளையும் கைப்பற்ற முடியும் என்றார்.

விழாவில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் குத்துவிளக்கேற்றி சிறப்புரையாற்றினார்

இந்நிகழ்ச்சியில் தொகுதி பொறுப்பாளர்கள் உமா, சீனிவாசன், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழக தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக திருச்செங்கோடு மேற்கு நகர பொறுப்பாளரும், முன்னாள் நகர மன்ற தலைவருமான ஆர். நடேசன் திருச்செங்கோடு கிழக்கு நகர பொறுப்பாளரும், நகர் மன்ற துணைத் தலைவருமான தா.கார்த்திகேயன் நன்றி கூறினர்.

தமிழ்நாடு மாம்பழ விவசாயிகளைப் பாதுகாப்பீர்!

அரசியலமைப்பின் 301-வது பிரிவை நிலைநாட்ட உடனே தலையிட வேண்டும்!

ஒன்றிய அரசுக்கு டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூன் 21 -

வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், ஒன்றிய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பெரும் நெருக்கடியில் உள்ளனர். வேலூரில் மட்டும் 5,710 ஹெக்டேர் நிலத்தில் ஆண்டுக்கு 46,000 டன் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், இப்போது 40,000 டன் மாம்பழம் விற்கப்படாமல் வீணாகி, விவசாயிகள் வறுமையில் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நெருக்கடிக்கு முக்கிய காரணம், ஆந்திரப் பிரதேச அரசு, சித்தூர் மாவட்டத்தில் உள்ள பழச்சாறு தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாட்டு மாம்பழங்களை வாங்கத் தடை விதித்தது. இது இந்திய அரசியலமைப்பின் 301வது பிரிவை மீறும் செயல். இந்தப் பிரிவு, இந்தியா முழுவதும் வணிகம், வர்த்தகம், தொடர்பு ஆகியவற்றை சுதந்திரமாக நடத்த உரிமை அளிக்கிறது. ஆந்திர அரசின் இந்த அநீதியான முடிவு, விவசாயிகளின் வாழ்வை அழிப்பது மட்டுமல்ல, இந்தியாவின் பொருளாதார ஒற்றுமையையும் பாதிக்கிறது.

ஒன்றிய அரசு இந்தப் பிரச்சினையில் மௌனமாக இருப்பது மிகவும் வேதனை அளிக்கிறது. தமிழ்நாட்டு விவசாயிகளை இந்த நெருக்கடியிலிருந்து காப்பாற்றவும், அரசியலமைப்பை நிலை நாட்டவும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிரச்சினையின் விவரங்கள்

கடந்த 25 ஆண்டுகளாக, வேலூரைச் சேர்ந்த விவசாயிகள் 42,000 டன் மாம்பழங்களை சித்தூரில் உள்ள 34 பழச்சாறு தொழிற்சாலைகளுக்கு விற்று வந்தனர். சித்தூர் வெறும் 30 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆனால், ஆந்திர அரசு தமிழ்நாட்டு மாம்பழங்களை தடை செய்து, ஆந்திர விவசாயிகளுக்கு மட்டும் முன்னுரிமை அளிக்கிறது.

ஆந்திர அரசு ஒரு கிலோ மாம்பழத்திற்கு 4 ரூபாய் மானியமும், தொட்டாபுரி மாம்பழத்திற்கு குறைந்த பட்ச விலையாக 12 ரூபாய் அறிவித்துள்ளது. தமிழ்நாட்டு மாம்பழங்கள் எல்லையில் நிராகரிக்கப்படுகின்றன. இதனால், வேலூரில் மாம்பழங்கள் விற்கப்படாமல் குவிந்து, விலை குறைந்து விட்டது. திருப்பத்தூர், கிருஷ்ணகிரி போன்ற இடங்களுக்கு மாம்பழங்களை எடுத்துச் செல்ல ஒரு டன்னுக்கு 1,2001,500 ரூபாய் செலவாகிறது. அங்கு ஒரு கிலோவுக்கு 5 ரூபாய் மட்டுமே கிடைக்கிறது. வேலூரில் பழச்சாறு தொழிற்சாலைகள் இல்லாததும், பழைய கூட்டுறவு பழச்சாறு தொழிற்சாலை மூடப்பட்டதும் விவசாயிகளை மேலும் பாதிக்கிறது. இதனால், அவர்களின் உழைப்பு வீணாகி, குடும்பங்கள் நிர்க்கதியாக உள்ளன.

301வது பிரிவு மீறலும், ஆந்திர அரசை கண்டித்தல்

ஆந்திரப் பிரதேச அரசின் இந்த முடிவு, இந்திய அரசியலமைப்பின் 301வது பிரிவை மீறுவதாகும். இந்தப் பிரிவு, இந்தியா முழுவதும் மாநிலங்களுக்கு இடையேயும், மாநிலத்திற்குள்ளும் வணிகம், வர்த்தகம் சுதந்திரமாக நடைபெற வேண்டும் என்று உறுதி அளிக்கிறது. இது இந்தியாவின் பொருளாதார ஒற்றுமையை உறுதி செய்யும் முக்கிய பிரிவு. ஆனால், ஆந்திர அரசு, தமிழ்நாட்டு மாம்பழங்களை சித்தூர் தொழிற்சாலைகளுக்கு தடை செய்து, அரசியலமைப்பை மீறியுள்ளது. எல்லையில் விவசாயிகளின் விவரங்களை சோதித்து, ஆந்திர விவசாயிகளுக்கு மட்டும் அனுமதி அளிப்பது, தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு எதிரான பாகுபாடு.

இது விவசாயிகளின் வாழ்வை அழிப்பது மட்டுமல்ல, இந்தியாவின் ஒற்றுமையையும், மாநிலங்களுக்கு இடையேயான நல்லுறவையும் பாதிக்கிறது. 25 ஆண்டுகளாக தமிழ்நாட்டு விவசாயிகள் சித்தூர் தொழிற்சாலைகளுக்கு மாம்பழம் வழங்கி, இரு மாநிலங்களின் பொருளாதாரத்திற்கும் பங்களித்து வந்தனர். ஆனால், ஆந்திர அரசு, சுயநலத்திற்காக இந்த உறவை அழித்து விட்டது.

ஒன்றிய அரசின் மௌனம் மிகவும் ஏமாற்றமளிக்கிறது. இந்திய அரசியலமைப்பின் 301வது பிரிவை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு மத்திய வேளாண்மை அமைச்சகத்திற்கு உள்ளது. ஆனால், ஆந்திர அரசின் தவறான முடிவை எதிர்க்காமல், தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்காமல், ஒன்றிய அரசு மௌனமாக உள்ளது. இது

'விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்', 'ஆத்ம நிர்பர் பாரத்', 'பிரதான் மந்திரி பயிர் காப்பீடு திட்டம்' போன்ற வாக்குறுதிகளுக்கு எதிரானது.

தமிழ்நாடு அரசையும் வேலூர் மாவட்ட நிர்வாகத்தையும் பாராட்டுதல்

ஆந்திர அரசின் அநீதியையும், ஒன்றிய அரசின் மௌனத்தையும் எதிர்கொண்டு, தமிழ்நாடு அரசு, முதலமைச்சரின் அற்புதமான தலைமையில், விவசாயிகளுக்கு ஆதரவாக தனித்து நிற்கிறது. தமிழ்நாடு அரசு, விவசாயிகளின் நலனை முதன்மையாகக் கருதி, பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

வேலூர் மாவட்டத்திலிருந்து ஒரு உயர்மட்டக் குழு சித்தூருக்கு அனுப்பப்பட்டது. இந்தக் குழுவில் வேளாண்மை துணை இயக்குநர், வேளாண்மை அதிகாரிகள், தோட்டக்கலை அதிகாரி, துணை தாசில்தார், ஆர்.டி.ஓ. அதிகாரி ஆகியோர் இருந்தனர். இவர்கள் சித்தூர் மாவட்ட அதிகாரிகள் மற்றும் பழச்சாறு தொழிற்சாலைகளுடன் பேசி, முழு விவரங்களை அறிக்கையாக அளித்தனர். இந்த அறிக்கை, பிரச்சினையை மாநில மற்றும் ஒன்றிய அரசுக்கு எடுத்துச் செல்ல உதவியது.

ஒன்றிய அரசு எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள்

தமிழ்நாடு அரசின் முயற்சிகளை ஆதரிக்கவும், 301வது பிரிவை நிலைநாட்டவும், ஒன்றிய அரசு உடனடியாக பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

1. மாநிலங்களுக்கு இடையே பேச்சுவார்த்தை: தமிழ்நாடு மற்றும் ஆந்திர முதலமைச்சர்கள், வேளாண்மை அமைச்சர்களுடன் உடனடி கூட்டம் நடத்தி, தமிழ்நாட்டு மாம்பழங்களுக்கு சித்தூர் தொழிற்சாலைகளில் 1421 நாட்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இது 301வது பிரிவின் சுதந்திர வர்த்தக உரிமையை உறுதி செய்யும்.

2. நிதி உதவி: ஒரு கிலோ மாம்பழத்திற்கு 4 ரூபாய் மானியம், ஒரு விவசாயிக்கு 5,000 ரூபாய் நிவாரணம், மற்றும் போக்குவரத்து செலவுக்கு மானியம் வழங்க வேண்டும். இவை 10 நாட்களுக்குள் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

3. சந்தை ஆதரவு: NAFED மற்றும் APEDA மூலம் ஒரு கிலோ மாம்பழத்திற்கு 12 ரூபாய் குறைந்தபட்ச விலையில் மாம்பழங்களை வாங்க வேண்டும். வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூரில் தற்காலிக வாங்குதல் மையங்கள் அமைக்க வேண்டும்.

4. உள்கட்டமைப்பு மேம்பாடு: வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரியில் பழச்சாறு தொழிற்சாலைகள், குளிர்பதன கிடங்குகள் அமைக்க 500 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும். கூட்டுறவு பழச்சாறு தொழிற்சாலைகளை மீண்டும் தொடங்க வேண்டும்.

5. தேசிய வர்த்தகக் கொள்கை: 301வது பிரிவை அடிப்படையாகக் கொண்டு, மாநிலங்களுக்கு இடையே விவசாய வர்த்தகத்தை ஒழுங்குபடுத்த ஒரு தேசிய கொள்கையை உருவாக்க வேண்டும். பாகுபாட்டைத் தடுக்க ஒரு நிரந்தர ஆணையம் அமைக்க வேண்டும்.

6.நலத் திட்டங்களில் சேர்க்கை: மாம்பழங்களை மதிய உணவுத் திட்டம், ICDS போன்ற திட்டங்களில் சேர்க்க வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு மாம்பழம் வழங்குவதை ஊக்குவிக்க வேண்டும்.

7. ஏற்றுமதி ஊக்குவிப்பு: தமிழ்நாட்டு மாம்பழங்களை ஆத்மநிர்பர் பாரத், மேக் இன் இந்தியா திட்டங்கள் மூலம் உலக சந்தையில் பிரபலப்படுத்த வேண்டும்.

8.விவசாயிகளுக்கு ஆதரவு: அறுவடை முறைகள், சந்தை விவரங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். புகார்களுக்கு ஒரு இலவச தொலைபேசி எண்ணை அறிமுகப்படுத்த வேண்டும்.

இந்தப் பிரச்சினையில் உங்கள் தனிப்பட்ட கவனத்தையும், உடனடி நடவடிக்கையையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம்

பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் பெரம்பலூர் மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அழகு நீலமேகம் அவர்கள் வேப்பூர் கிழக்கு ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், அழகு நீலமேகம் அவர்கள், தான் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்;

பெரம்பலூர் மாவட்டம், **பொதுக்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜூன் 23 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/–வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் பெரம்பலூர் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 19.06.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.